REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 182

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 28உ செவ்வாய் (12—1—54) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 29உ புதன் (13—1—54)

கல்வித் திட்ட எதிர்ப்பில் தண்டனை பெற்றவர் கிடையாதாம்!

—(:)—

மறியலில் ஈடுபட்டவர் கல்லாதவராம்!

—(:)—

1800 தோழர்கள் கைதானது அற்பமாம்!

—(:)—

சி. ஆர். கிறுக்கும் செருக்கும்!

சென்னை, ஜன. 11—

"தடையை மீறி ஊர்வலம் நடத்தியதற்காகவும், சிறுவர்களைப் பள்ளியில் நுழையாது தடுத்தல் போன்ற செயல்களுக்காகவும் கைது செய்யப்பட்டனர்,"

என்று ஆச்சாரியார், சட்டசபை உறுப்பினர்களான தோழர்கள் அரங்கநாதன், இ. ரத்தினம் (தா. ச) ஆகிய இருவர் கேள்விகளுக்கு பதில் தந்தார்.

"மொத்தம் கைது செய்யப்பட்டவர்கள் 1,813 பேர் - செங்கல்பட்டு 11; வட ஆற்காடு 3; தென் ஆற்காடு 21; தஞ்சை 46; மதுரை 1,036; திருநெல்வேலி 47; திருச்சிராப்பள்ளி 62; சென்னை 587. ஆகஸ்டில்—வட ஆற்காடு 6.

"பள்ளிக்கு முன் மறியல் செய்தவர்களை விசாரணைக்குக் கொண்டுவரப்படவில்லை தடை உத்திரவை மீறினவர்கள் பள்ளிமுன் குழப்பம் ஏற்படுத்த முயற்சித்ததால் கைது செய்யப்பட்டு, உடன் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். அவர்களை விசாரிக்க வேண்டிய காரணம் எதுவும் கிடையாது; அது வெறும் தடுப்பு நடவடிக்கையே யாகும்," என்று, ஆச்சாரியார், காஞ்சிபுரம் எஸ். தெய்வசிகாமணி கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் தந்தார்.

வி பாலகிருஷ்ணன்:— மறியலானது சட்டத்திற்குப் புறம்பானது, விரும்பத் தகாதது, பொறுத்துக் கொள்ளக் கூடாதது; அதுவும், எதற்கும் பரிகாரம் வாக்குப் பெட்டி மூலம் தயாரில் இருக்கிறபொழுது என்பது உண்மையல்லவா?

ஆச்சாரியார்: "அது, மறியலின் தன்மையைப் பொறுத்து இருக்கிறது." ஆரம்பப் பள்ளி முன் மறியல் செய்யும் வகையில் நான், அதை, ஒப்புக் கொள்ளுகிறேன். அது மிக மிக விரும்பத் தகாதது தான். அதனால்தான் நாங்கள் மேற்சொன்ன நடவடிக்கையை மேற்கொண்டோம்.

ஒய். மஞ்சையா ஷெட்டி:— மதுரை மாவட்டத்தில்தான் கைது செய்யப்பட்டவர் எண்ணிக்கையும், ஆரம்பப் பள்ளியில் புதிதாகச் சேர்ந்த சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. எனவே, கைதானவர் தொகைக் கூடுதலாக இருப்பதின் விளைவாகத் தான் பள்ளியில் சேர்ந்தவர் எண்ணிக்கையும், கூடுதலாகி இருக்கிறது என்று கொள்ளலாமா?

ஆச்:— அந்த விவாத உட்பொருளை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால், பள்ளியில் தொகை பெருகி இருப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்

"இத்தகையச் செயல்களின் மூலம் சர்க்காருக்கு ஏதாவது வருமானம் கிடைத்திருக்கும் என்று நான் எண்ணவில்லை. சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் மக்கள் இயல்புக்கு பங்கம் ஏற்படுகிறபொழுது நாங்கள் செலவழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் எனவே, சர்க்கார் பணம் செலவாகிறதைத் தவிர வேறு வழியில்லை" என்று ஆச்சாரியார் மற்றொரு உறுப்பினர் கேள்விக்குப் பதில் கூறினர்.

மணலி கந்தசாமி:—அரசியல் காரணங்களுக்காகத்தான் மறியல் என்று சொல்லப்படுவதால், சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்வதைப் பற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?

ஆச்.—எனக்குத் தெரிந்த வரையில், இது விஷயமாக ஒருவரும் அபராதம் விதிக்கப்படவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை; விடுதலை செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுவதற்கு இடமில்லை இதுவகையில், பயங்கரமான எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

எஸ். ராமசாமி நாயுடு:—திட்டத்தைக் காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்தது என்பதற்காகவா அவர்கள் மறியல் செய்தார்கள்?

ஆச்:—கொலை உள்பட, எல்லா விஷயங்களையும் அரசியலாக்கும் ஒரு போக்கு இருக்கிறதென்பதை நான் ஒப்புகிறேன்.

எஸ். ராமலிங்கம்:— 1800 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் — அது திட்டத்திற்குள்ள பலத்த எதிர்ப்பைக் காட்டுகிறது—எனவே, சர்க்கார் திட்டத்தைக் கைவிடுமோ?

ஆச்.—மூன்று கோடி மக்கள் தொகையில், இதுபோன்ற இயக்கத்தில் பங்கு கொண்டவர் 1,800 பேர் தான் என்பது மிக அற்பமானதாகும்."

காங்கிரஸ் உறுப்பினர்:- மறியலில் கலந்து கொண்டவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களா?

ஆச்:-எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தவறாக எண்ணிக்கொள்ளாமலிருப்பதாக இருந்தால், அவர்களில் பலர் படிக்காதவர்களே என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கைத்தறித் துணி விலைகளில் தள்ளுபடி

கோவை, ஜன. 11—

தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை விலை போக்குவதற்கான நடவடிக்கையாக விலையில் தள்ளுபடி செய்யும் 'திட்ட மொன்று, சென்னை மாநிலத்திலேயே, முதன் முதலாக, கோவையில் அமுலாக்கப்பட்டுள்ளது.

ஒரே தடவையில் ரூ. 5-க்கு மேலும், ரூ. 50-க்குக் கீழும் துணி வாங்குவோருக்கு விலையில் ரூபாய்க்கு 0-1-6 அணா குறைத்து விற்க மாநில கூட்டுறவு பதிவாளரால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கோவை விற்பனை நிலையத்திற்கும், விலையில் ரூபாய்க்கு அரையணா குறைத்து விற்க அனுமதி தரப்பட்டுள்ளது.

திண்டுக்கல் அருகே ரயில் மோதல்!

மதுரை, ஜன 10—

திண்டுக்கல்—பழனி ரயில்வே மார்க்கத்தில் உள்ள ஒட்டன் சத்திரம் ரயில்வே நிலையத்தில் இம்மாதம் 9-ம் தேதி அதிகாலையில் இரண்டு ரயில் வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டதால் 18 பேர் காயமடைந்தார்கள்.

விவசாயத்தில் நவீன முறைகள்

டாக்கா, ஜன 12—

விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாளும்படி செய்வதற்கான திட்டம் ஒன்று கிழக்கு பாகிஸ்தானில் அமுல் நடத்தப் படவிருக்கிறது. ஸில்ஹெட், பரீத்பூர், பிரிஸால், சிட்டகாங் ஆகிய இடங்களில் இத்திட்டம் முதலில் அமுல் நடத்தப்படும்.

பிரிட்டிஷ் முன்னாள் அயல் நாட்டு மந்திரியும் நிதி மந்திரியுமான லார்டு ஸைமன் இன்று இயற்கையெய்தினார்.

தி. மு. க. பலம் கண்டு சி. ஆர். அங்கலாய்ப்பு!

—(:)—

ரயில் நிறுத்தத்தில் கலந்து கொண்டவர் தொகை கண்டு ஆச்சாரியாரின் நடுக்கம்

வெளியிட்டால் விபரீதமாகுமென்று சட்டசபையில் மழுப்பல்

சென்னை, ஜன. 11—

"1953 ஜுலை 15-ந் தேதி ரயில் நிறுத்தப் போராட்டத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?"

என்று உழைப்பாளர் கட்சி சட்டசபை உறுப்பினரான செஞ்சி தோழர் அரங்கநாதன் அவர்கள் சட்டசபையில் கேட்டார்.

"கேட்கப்பட்ட தகவலைக் கொடுப்பது விரும்பக் கூடியதாகாது; எனெனில், தகவல் தருவதானது, அத்தகைய சட்டவிரோதமான செயல்களை ஊக்குவிப்பதாகும்,"

என்று முதல் அமைச்சர் ஆச்சாரியார் பதில் தந்தார்.

அரங்கநாதன்:— ரயிலை நிறுத்துவதற்கான காரணம் என்ன என்பதை அறிவிக்கக் கூடுமா?

ஆச்:—ரயிலை நிறுத்தினவர்களோடு நான் விவாதித்தது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழக அரசியல் கொள்கையுடன் அது தொடர்புடையதாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

எஸ். தெய்வசிகாமணி:— ரயில் நிறுத்தக் கிளர்ச்சி பெரும் பலமுள்ளதாக இருந்தது; எனவேதான் கைது செய்யப்பட்டவர் எண்ணிக்கையைக் கூறுவது பொதுஜன நன்மைக்குப் பாதகமாக இருக்கும் என்று சர்க்கார் அஞ்சுகிறதா?

ஆச்:- ரயிலை நிறுத்துவதென்பது, சமூக விரோதமான காரியமென்று சர்க்கார் கருதுவதால், எண்ணிக்கையைத் தருவது, அச்செயல்களில் ஈடுபட மற்றவர்களையும் ஊக்குவதுபோலாகும் என்று சர்க்கார் கருதுகிறது அதிகப்படியான சட்ட மீறுதல்களை நாங்கள் சகித்துக்கொண்டோம் என்பதைக் காட்டிக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை.

கே. ஆர். விஸ்வநாதம்:— ரயிலை நிறுத்தப் போகிறோம் என்று சர்க்காருக்கு முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டு இருக்ததா? அப்படியானால், தடுப்பு முறையாக சர்க்கார் என்ன நடவடிக்கையை மேற்கொண்டது?

ஆச்:—தனித்த முறையில் குறிப்பிட்ட காரியத்தை, தான் செய்யப்போவதாக ஒரு தனி மனிதர் அறிவித்திருந்தால், நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் குறிப்பிட்ட காரியம் நடைபெறும் என்று பொது அறிவிப்பு விடுத்திருக்கும் பொழுது, அக்காரியத்தைச் செய்யத் தூண்டுகிறவர்கள் தங்கள் செயலைத் திருத்திக் கொள்ளுவதற்கான அவகாசம் அளிக்காத பட்சத்தில், அவசரமான நடவடிக்கையை எடுத்துக்கொண்டோம் என்றக் குற்றச்சாட்டுக்கு நாங்கள் உள்ளாக்கப்படுவோம்.

கோவிந்தசாமி:— காரணமில்லாமல் ரயில் சங்கிலியைப் பிடித்திழுத்தால், ரூ. 50 அபராதம் என்றிருக்கிறது; நேரு, 'நான்சென்ஸ்' என்று திட்டியதை எதிர்த்தே—அதாவது காரணத்தோடு ரயில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தாலும், அபராதம் போடாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததேன்?

ஆச்:— உறுப்பினர் சொல்லியதில் பல தவறான தகவல்கள் உள்ளன.

நம் நாடு

சென்னை 12—1—1954 செவ்வாய்

விளக்கம் சரி! ஆனல்?

ஐக்கிய நாடு சபையின் ஒரு உறுப்பாக உள்ள கல்வி விஞ்ஞானக் கலாசாரக் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ள இந்திய தேசிய சங்கத்தின் முதலாண்டு விழா, இரண்டு தினங்களுக்குமுன் புதுடெல்லியில் நடைபெற்று இருக்கிறது. அந்த ஆண்டு விழா, கல்வி அமைச்சர் அபுல் கலாம் ஆசாத் தலைமையில் நடைபெற்று இருக்கிறது. அதில் பங்கு கொண்ட பிரதமர் நேருவும் ஆசிய மக்களின் சார்பில் பல கருத்துக்களைக் கூறி இருக்கிறார்.

ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் பிடியில் ஆசிய நாடுகள் பலவும் பட்ட அவதிகள் பற்றியும், பிடியிலிருந்து விடுபட்ட ஆசிய மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி பற்றிய விளக்கமும், அந்த அரசுகள் போக்கில் ஆசிய மக்கள் கொண்டுள்ள அச்சத்தின் தாரதாரத்தையும், அவர்கள் கொண்டுள்ள—சுதந்திர முன்னேற்ற நெஞ்சுரத்தையும், அதை இனி ஒருவராலும் கட்டளை இட்டுக் கட்டுப்படுத்த முடியாது என்பது பற்றியும், கலந்து பேசுவதின் மூலமாகத்தான் நிலைமையை நேர் செய்ய முடியுமென எடுத்துக்காட்டியும் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆசிய நாடுகளின் பிரச்னை, ஒரு மனிதத்துவ பிரச்னையாகும், என்றும், சுட்டிக் காட்டியுள்ளார் நேரு.

ஆசிய மக்களின் பிரச்னைகள் அனைத்தையும் ‘இரக்கச் சிந்தை’யுடன் கவனிக்கவேண்டுமென்றும் பண்டிதர் அறிவித்துள்ளார்.

ஆசிய மக்களைப் பற்றி பண்டிதர் கூறியுள்ள அனைத்தும், அம்மக்களின் உள்ளத்தை நன்கு நுணுகி ஆராய்ந்து, தெளிவாகக் கூறியதாகும் என்பதில் ஆட்சேபணை இல்லை என்ன இருந்தாலும், அவரும் ஒரு வரலாற்று ஆசிரியர் தானே? எனவே, ஆசிய மக்களின் மனோபாவத்தைப் படம் பிடித்துக் காட்டியதில் ஆச்சரியமொன்றுமில்லை. நிற்க,

ஆசிய மக்களின் இன்றைய நடைமுறையை, அக்கு வேருக, ஆணி வேருகப் பிரித்துப் பிரித்துக் காட்டும் திறமை படைத்துள்ள வரலாற்று ஆசிரியரான பண்டிதர், மொத்த ஆசிய மக்களில் ஒரு பெரும் பகுதியினராக உள்ள திராவிட இன மக்களின் தற்போதைய நிலையையும், நடைமுறையையும் மட்டும் ஏனோ எடுத்துக்காட்ட மறந்துவிட்டார் அல்லது உணர்ந்து பார்க்க மறுக்கிறார்— என்பதுதான் நமக்குப் புரியவில்லை. ஆசியா கண்டத்தில், எப்படி, பல இன, மொழிகளை, நாகரிகம் கொண்ட மக்கள் உள்ளனரோ, அதுபோலத் தானே, சந்தர்ப்பத் தோஷத்தால் ஒரே நாடாக உருவாகியுள்ள இந்தியத் துணைக்கண்டமான இதிலும் பல முரண்பட்ட கலாசாரங்களையும், பல வேறுபட்ட மொழியினையும் கொண்ட பல இன மக்கள் உள்ளனர். ஏன், இந்த மறைக்க முடியாத உண்மையை மறைக்க முயலுகிறார் நேரு, என்பது, வெட்ட வெளிச்சமாக வேண்டும். ‘ஏக இந்தியா’ என்பது, வெள்ளையன் துப்பாக்கி முனையால் உருவாக்கினதுதானே, என்று, பலமுறை சுட்டிக் காட்டுவதை நேரு கற்றிலரா?

பரந்த ஆசியா கண்டத்தில், பல பல, சிறு சிறு நிலப் பரப்புகள், தனித் தனி சிறு சுதந்திர அரசுகளாக, நிலைபெற்று வாழ்ந்து வருகின்றன என்பதை நாம் காண்கிறோம். அதுவும், உலகம், வல்லரசுகளால், இரு பெரும் முகாமாகப் பிளவுபட்டுக் கிடக்கும் நிலையிலும், அணியும் அச்சமின்றி, சுதந்திரத் தனி அரசுகளாக அவைகள் வாழ்ந்து வருவதிலேயே உறுதி கொண்டுள்ளன. இயற்கை வளம், நிலப் பரப்பு, மக்கள் தொகை, தொழில் திறம், கல்வி வளம் ஆகிய அனைத்துமோ அல்லது ஏதாவது ஒன்று இரண்டோ குறைவாகக் காணப்பட்டபோதிலும், தன்னுடைய தனித்தன்மையை, சுதந்திரத்தை விலையாகக் கொடுத்து, சகல வளங்களையும் பெற, அவைகளில் எதுவும் முன்வர, நாம் கண்டதில்லை. தனது சுதந்திரத்திற்குக் கேடு தேடிக்கொள்ளாத நிலையிலேயே, கூட்டுப் பாதுகாப்பு அணியில், அவைகள் இடங்கேட்கும் மிடுக்கினைப் பெற்றுள்ளன. ஆசியாவில் உள்ள எந்த ஒரு சிறு நாடும், தற்காப்புக்காக என்று தனது தனித் தன்மையை இழந்துவிட ஒருப்படுவதாகக் காணேம். நிற்க,

கருத்துப் பிளவின் காரணமாக, போர்ப் பயம் சூழ்ந்துள்ள இந்தக் காலத்திலும், ஆசியாவில் உள்ள சிறு சிறு நாடுகளும் சுதந்திரமாக வாழ முடியும், அப்படித்தான் வாழ வேண்டும் என்று பல்லாண்டு கூறுகிற பண்டிதர், ஏன், இந்தியத் துணைக் கண்டத்தை மட்டும் வெள்ளையன் அச்சுறுத்தி, எல்லைக் கோடிட்டு உருவாக்கித் தந்த வண்ணமே கட்டியாளக் கங்கணங் கட்டியிருக்க வேண்டும்? அதன், இரகசியம் என்ன? இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எப் பகுதி மக்களின் யோசனையைக் கேட்டு, பண்டிதர், வெள்ளையன் விட்டுச் சென்றபடியே, இந்தியா இருக்கப் பார்த்துக் கொண்டார், என்று கேட்கிறோம்?

“ஆசியாவிலுள்ள கோடானுகோடி மக்களை ஜனநாயக முறையில் சமாளிக்க வேண்டும். இம் மக்களின் அபிப்பிராயத்தையும், யோசனைகளையும் கேட்கத்தான் வேண்டும்’ என்று வல்லரசுகளுக்கு உபதேசம் செய்கிற உபதேசியார், என்றாவது, தன் உபதேசப்படி, தான் நடக்க வேண்டுமே என்று எண்ணிப் பார்த்ததாவது உண்டா?

“ஆசிய மக்கள் இப்பொழுது எழுச்சி பெற்று வளர ஆரம்பித்துவிட்டார்கள். லட்சக்கணக்கில் உள்ள இம் மக்கள், தவறான வழியில் போய்விட்டால், இவர்களை லேசில் கட்டுப்படுத்த முடியாது. சமாளிப்பதே மிகவும் கடினம்’ என்றும், ‘மகத்தான சக்தி இது; யாரும் இவர்களை தங்கள் விருப்பப்படி உருவாக்கிவிட முடியாது; வெறும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் அடிமைகள் அல்ல இவர்கள்; இவர்களுடன் பேசி சரிப்படுத்தலாம்’’ என்றும், பண்டிதர் ஆசிய மக்களின் இன்றையப் போக்கை ஐரோப்பிய வல்லரசுகளுக்கு அறிவுறுத்துகிறார்.

மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு அச்சுறுத்தும் முறையான கட்டளையும்—ஆணையும் பயன் தராது என்று வல்லரசுகள் விஷயத்தில் அறிவுரை கூறும் பண்டிதர், சொந்த விஷயத்திலும், அதை. கொஞ்சமாவதுமேற்கொண்டு ஒழுக முன்வருவதுதான் நல்லது.

திராவிட மக்களின் பிரச்னையை; கலந்து பேசி முடிவு காண வேண்டிய ஒன்றாகக் கொள்ளாமல், ஆணவத்தோடு பேசி வருவதால் தீர்த்துக் கட்டிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிற பண்டிதர்தான், கலந்து பேசும் மக்களாட்சி மாண்பு பற்றிச் சொல்லலங்காரமாகப் பேசித் தீர்க்கிறார். அவர் என்ன செய்வார், பாவம்! பிறருக்கு உபதேசம் என்றால், விளக்கம் கூறுவதை எதுவும் குறுக்கே விழுந்து அவரைத் தடுப்பது கிடையாது. ஆனால், சொந்த நாட்டு விஷயம் என்றால், ‘பெரிய நாட்டுப் பிரதமர்’ என்ற மயக்கம் அவருடைய மூளை இயக்கத்தைக் குழப்பிவிடுகிறது!

எனவே, உள்ள நாட்டுப் பிரச்னை அனைத்திலும் பண்டிதர் விளக்கம், வெறும் ஆனல்......ஆனல்தான்!

‘நாகரீகத்தில் இருந்து விலகி நிற்பதே ஆதாரக் கல்வி!’

—(:)—

‘கேடு பயக்கும் இரண்டு கோட்பாடுகள் உள்ளன’

‘கல்வியை மறுத்து சிறுர்களைத் தொழிலாளர்களாக மாற்றுவதே குறிக்கோள்’

ஆதாரக் கல்வியில் இஸ்மெயில் காணும் குறை

ஜெய்ப்பூர், ஜன. 12— ஆதாரப் பள்ளிப் பயிற்சியை நடைமுறைக்குக் கொண்டுவருவது, ‘நாகரீகத்திலிருந்து’ பின்நோக்கிச் செல்வதாகும் என்று தாம் நம்புவதாக, ஸர். மிர்ஜா இஸ்மெயில் தெரிவித்தார்.

ராஜபுதன பல்கலைக் கழக 6-வது பட்டமளிப்பு விழாவில் பேசுகையில், அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“ஆதாரப் பயிற்சி, இரண்டு அழிவுக் கொள்கைகளை உள்ளடக்கிக் கொண்டிருப்பதாக நான் அஞ்சுகிறேன். முதலாவதாக, ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகள், விற்பனைக்கு உரிய சாமான்களை உற்பத்தி செய்யும் நோக்கோடு, ஏதாவதொரு கைத்தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதும், இரண்டாவதாக, புத்தகப் படிப்பை மிகுந்த அளவு குறைத்துக்கொள்ள வேண்டுமென்பதும்—இந்த இரண்டும், நாகரீகத்திலிருந்து பின் வாங்குவதாகும்.

“குழந்தைகளை தொழிற்சாலை வேலையாட்களாக மாற்றுவது, அவர்களுக்கு கல்வியை மறுப்பதாகும்.’’

“ஆரம்பக் கல்விக்கான செலவை, அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்-குழந்தைகளின் உழைப்பு சக்தியை உபயோகப்படுத்தியல்ல! கல்வியின் முழு லட்சியத்தை அடையும் பொருட்டே குழந்தைகளின் பள்ளிநேரம் செலவிடப்பட வேண்டும்.

“வியாபாரத்திற்குகந்ததல்லவென்று கருதப்படும் ஒரு கைத்தொழிலே, ஒரு குறிப்பிட்ட அளவுள்ளதாயிருந்த போதிலும், கல்வி கற்றுத் தருவதற்கு சிறந்த சாதனமென்று கொள்ளப்படும்போது, ‘கிண்டர் கார்டன்’ முறையைத் தவிர, வேறு எல்லா நிலைகளிலும், புத்தகங்களே மிகச் சிறந்த கல்வி போதிக்கும் சாதனம் என்பதை திரும்பவும் சொல்லவேண்டியுள்ளது.”

மிர்ஜா மேலும் சொன்னார்:— “நாம் ஒரு கற்றறிந்த சமுதாயத்தை, எழுத்தறிவின்றி நிச்சயமாக உண்டாக்க முடியாது; உண்மையான கல்வி அறிவின்றி, அறிவின்மையைப் போக்க முடியாது.”

“கல்வியைப் பற்றி மக்களின் எண்ணம், இப்பொழுது குழம்பியதாகவே இருக்கின்றது. பொதுவாக, ஒருபுறம், கல்வி வேண்டும் என்று எண்ணும் பெரிய மக்கள் தொகை; மற்றொருபுறம், கல்விமுறைப் பற்றியும், அதன் பலன் பற்றியும் எழுந்துள்ள அதிருப்தி.

எனவேதான், மத்திய கல்வி மந்திரி மௌலானா ஆசாத், சமூகத்தின் கல்வித் தேவைகளையும், கல்வி முறைகளையும் அனுசரிப்பது பற்றி நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.”

சர்க்கார் கல்வி ஆலோசகரே ஆச்சாரியாரை சாடுகிறார்!

‘தகுந்த கல்வித் திட்டம் தா மாணவர்களே தக்கவர்கள்’

‘ஓய்வு கால சேவை என்பது கிராமத்தவனை ஏமாற்றுவதே’

“ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் தற்போதைய கல்வி முறையைக் கண்டிப்பதைக் கேட்கலாம். ஆனல் நடைமுறையில் அதைத் திருத்த யாரும் முன் வருவதில்லை.

“சர்க்காரோ, சர்வ கலா சாலையோ, பொதுஜன அபிப்பிராயமோ கல்வி முறையை திருத்தி அமைப்பது சாத்தியமில்லை; மாணவர்கள் மட்டுமே இதைச் சாதிக்க இயலும்.

“மாணவர்கள் பல ஆண்டுகள் படித்து முடித்த பின்னர், இறுதியில் என்ன செய்வதென்று யோசிக்கும் நிலை தற்போதுள்ளது. சரியான கல்வி முறையில் இந்நிலை இருக்காது. சமார் 8-ம் வகுப்பு வரை கல்வி பயின்ற பின், மாணவர்கள் தாங்களே தங்கள் திட்டங்களை வகுத்துக் கொள்ளவேண்டும்.

“சமூக சேவை, கல்லூரிப் படிப்பின் ஒரு நிரந்தர பகுதியாகஇல்லாமல், ஓய்வு நேரப் பணியாக இருந்தால் பயனளிக்காது. ஓய்வு நேர சமூகப் பணி, கிராம மக்களை ஏமாற்றும் வித்தை என்றே நான் கருதுகிறேன்.”

‘அழிவு’ப் பொருள்கள் ‘ஆக்க’ வேலைக்கு!

ஜினிவா, ஜன. 11— அணுசக்திப் பொருள்களை யுத்தக் காரியங்களுக்கு அடியோடு பயனில்லாமல் செய்யவும், அங்குள்ள கைத்தொழில் அபிவிருத்திக்கு மட்டும் செலவிடவும் ஒரு வழியை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

முடியாத காரியம்!

லண்டன், ஜன. 11— “சந்திர மண்டலம் போய்ச் சேர்ந்தாலும் சேர்ந்துவிடலாம்; ஆனல், நட்சத்திரங்களில் மனிதன் போய் இறங்குவதென்பது முடியாத காரியமென்றே நினைக்கிறேன்; அவைகள் வெகு தூரத்திலுள்ளவை; இப்போதுள்ள வேகத்தைக் கொண்டு, மனிதன், தன் ஜீவிய காலத்திற்குள் நட்சத்திரங்களில் போய்ச் சேரமுடியாது,’’ என்று பிரிட்டிஷ் வான ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

குழப்பத்தில் ஓர் தெளிவு!

லண்டன், ஜன. 11— “ஆயுதங்கள் இல்லாத காரணத்தால், இரண்டு போர்க் குழுவை, பாகிஸ்தான் கலைக்க வேண்டியிருக்கிறதென்றும், அந்த இரண்டு குழுவுக்களுக்கான ஆயுதங்களைப் பெறவே பாகிஸ்தான் இப்போது முயல்கிறது,’’ என்றும் கூறப்படுகிறது.

புது டில்லி — மாஸ்கோ விமான சர்வீஸ்

பெர்லின், ஜன. 11— மாஸ்கோவிலிருந்து புது டில்லிக்கு ஸ்ரீநகர் வழியாக விமான சர்வீஸ் நேரடியாக ஏற்படுத்த ரஷ்யா உத்தேசித்துள்ளதென்று தகவல் கிடைத்துள்ளது.

கல்லக்குடி அறப்போராட்ட வழக்கு

திருச்சி, ஜன. 5—

கல்லக்குடி அறப்போர் வழக்கு விசாரணை திருச்சி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் திரு. கே. பி. ராதா கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது. எதிர் தரப்புத் தோழர்களின் சார்பில், சாட்சியமளித்தவர்களின் விசாரணை விபரம் தொடர்ந்து தரப்படுகிறது:—

நாடக டைரக்டர் தோழர் டி. கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது :—

"நாடகங்கள் சம்பந்தமான தொழிலில் நான் ஈடுபட்டுள்ளேன்; 2, 3 ஆண்டுகளாகவே ஷெரீபை எனக்குத் தெரியும்; நாடகத்துக்குத் துணையாக இருப்பார்; சென்ற ஜூலை 15-ந் தேதி, ஷெரீப், என் கடைக்கு சுமார் 12 மணிக்கு வந்தார்; 20 நிமிஷம் பேசிக் கொண்டிருந்தார். அவர் பீடி தொழிலாளர் சங்கத் தலைவர்; அதற்கு நிதி நாடகம் போட்டுக் கொடுக்கும்படி கேட்டார்; பிறகு, தான், நண்பர் சுபான் வீட்டுக்குச் செல்வதாக விடைபெற்றுக் கொண்டு 1-5 மணிக்குச் சென்றார்."

சர்க்கார் வக்கீல் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது :—

"நான், ஷெரீப்பைக் கண்ட போது ஒன்றும் கேட்கவில்லை; நிதி உதவி நாடகம் போடுமாறு 2, 3 மாதமாக அவர் கேட்டிருந்தார்; அடிக்கடி கடைக்கு வருவார்; எந்தெந்தத் தேதிகளில் வந்தாரெனக் குறிப்பாகக் கூற முடியாது; எனக்கு டைரி கிடையாது."

பிறகு அப்துல் சுபான் சாட்சியமளிக்கையில் கூறியதாவது :

"பீடி கம்பெனி பிராஞ்சு ஏஜண்டான ஷெரீபை எனக்குத் தெரியும்; பீடி தொழிலாளர் சங்கத் தலைவர்; பக்ரீத் விருந்துக்கு சென்ற ஜூலை 15ந் தேதி அவரை அழைத்திருந்தேன்; அன்று சாப்பாடு 1-30 மணிக்கு நடந்தது; சங்கத்தில் பேசிவிட்டு கடைத் தெருவுக்குச் சென்றதும், டால்மியாபுரத்தில் சுட்டுவிட்டதாகவும், ஆட்களைப் பிடித்துக் கொண்டு ஜங்ஷனுக்கு வருவதாகவும் கேள்விப்பட்டோம்; ஜங்ஷனுக்குச் சென்றோம்; 5-45 மணியிருக்கும்; ஷெரீப் முதல் வகுப்பு கேட் வரை சென்று பார்த்தார்; அங்கு போலீசார் சூழ்ந்து கொண்டு விரட்டினர்; நான் ஓடிவிட்டேன்."

குறுக்கு கேள்விக்குப் பதில் அளிக்கையில் சாட்சி கூறியதாவது:

"முதல் வகுப்புக் கேட்டில் 7 பேரைச் சுற்றி போலீசார் உட்கார்ந்திருந்தனர்; அவர்களைக் கண்டதும் பயந்து வீடு திரும்பினேன்; அங்கு ஷெரீப் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை."

அடுத்துத் தோழர் கிருஷ்ணசாமி ரெட்டியார் கூறியதாவது :

"நான் ஒக்கரை கிராமத்தைச் சேர்ந்தவன்; ஏழாம் எதிரி பங்காருசாமியை எனக்குத் தெரியும்; ஜூலை 15ந் தேதி 1-மணி வண்டிக்கு அரியலூரிலிருந்து திருச்சி வந்தேன்; டால்மியாபுரத்தில் ரயிலிலிருந்தேன்; அங்கு 7-ம் எதிரியைக் கண்டேன்; 15 நிமிடத்திற்கு ரயில் நின்றது; அங்கு வந்ததும் துப்பாக்கிச்சத்தம் கேட்டது; ஜனங்கள் ரயில் ஜன்னல் கதவுகளை மூடிவிட்டனர்; லால்குடியில் வந்து நாங்கள் இறங்கினோம், வேறு எங்கும் அவர் இறங்கவில்லை. அங்கு போலீசார், பங்காருசாமியை நிற்கும்படி கூறினார்கள்; நான் ஒக்கரை காங்கிரஸ் கமிட்டி பொக்கிஷதார்"

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :—

"அவர் எனக்குச் சொந்தமில்லை; நான் போலீசாரைக் கேட்கவில்லை."

அடுத்து தோழர் ஜெயபால்சாமி நாடார் தமது சாட்சியத்தில் கூறியதாவது :—

"மெத்தாடிஸ்டு மிஷன் பள்ளி மானேஜர் நான்; அரியலூரிலிருந்து 1-50 மணி ரயிலில் திருச்சிக்கு வந்தேன்; என்னுடன் கோபாலகிருஷ்ணன் (எதிரிகளில் ஒருவர்) கூட வந்தார். அவரை எனக்குத் தெரியும். டால்மியாபுரத்தில் வண்டி நின்றதும் துப்பாக்கிச் சப்தம் கேட்டது; 10-நிமிடம் கழித்து ரயில் கிளம்பியது; அதுவரை, எதிரி, என்னுடன் பேசிக்கொண்டிருந்தார்; வண்டி கிளம்பும்வரை அவர் கீழே இறங்கவில்லை; புல்லம்பாடியில் நான் இறங்கினேன்; ஒரு நண்பரின் புது வீடு புகும் வைபவத்திற்குச் சென்றேன்; புல்லம்பாடி வரும்வரை 2-ம் எதிரி வண்டியை விட்டு இறங்கவேயில்லை; நான் 17 வருடமாக கிறிஸ்தவ சங்கத்தில் சேவை செய்து வருகிறேன்."

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :—

"ரயில் வந்ததும், 20-ம் எதிரி எறிக்கொண்டதைப் பார்த்தேன்; தாம் டால்மியாபுரம் போராட்டத்தை வேடிக்கை பார்க்கப் போவதாகக் கூறினார்; பிளாட்பாரத்தில் 100, 150 நபர் இருந்தனர்; கார்டு வந்த பின்பே வண்டியிலேறினேன்; குண்டு சப்தம் வண்டியில் கேட்கவில்லை; பிளாட்பாரத்திலிருந்து 15 நிமிஷத்தில் வண்டி புறப்பட்டது; மற்றும் 15 பேர் ஏறினார்கள்; அவர்களை நான் எதுவும் கேட்கவில்லை; பிளாட்பாரத்தை விட்டு ரயில் புறப்பட்டவுடன் கலாட்டா ஆரம்பித்தது."

பின்னர் தோழர் சிவசாமி தமது சாட்சியத்தில் கூறியதாவது:—

"எனக்கு மூங்கில்பாடி வடிவேலுவை (2-ம் எதிரி) தெரியும்; எதிரியை அரியலூர் பஸ் ஸ்டாண்டில் சந்தித்து, இருவரும் பஸ்ஸில், டால்மியாபுரம் சென்றோம். டால்மியாபுரத்தில் காபி சாப்பிட்டுவிட்டு 1-30 மணி ரயிலுக்குச் சென்றோம். ரயிலடியில் போலீசார் அடித்ததில் வடிவேலுவுக்குப் புருவத்தில் அடிபட்டது; நாங்கள் வெளியே வந்துவிட்டோம்; அப்போது 14-ம் எதிரி நாராயணனை தூக்கிக்கொண்டு வந்தனர்; 2-ம் எதிரி, அடிபட்டவரை, பிளஷர் காரில் கொண்டு போவதாகச் சொன்னார், நான் திருச்சிக்கு பஸ்ஸில் வந்தேன்; டிக்கெட் வாங்கியபின், 2-ம் எதிரி கல்லை விட்டு எறியவுமில்லை; மறியல் செய்யவும் போகவில்லை."

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :—

"நாங்கள் ஒரே ஜாதியினர் தான்; நான் தி. மு கழகக் கட்சியைச் சேர்ந்தவனல்ல; 2-ம் எதிரி மெம்பர்தான்; சாமான் வாங்க திருச்சிக்குச் சென்றேன்."

அடுத்து, திருச்சி ஜில்லா கம்யூனிஸ்டு கட்சி காரியதரிசி தோழர் ராமச்சந்திரன் சாட்சியம் கூறியதாவது :—

"நான் திருச்சி ஜில்லா கம்யூனிஸ்டு கட்சி காரியதரிசி; ராம்தாஸ் (எதிரி) லால்குடி தாலுகா கம்யூனிஸ்டு கட்சிக் காரியதரிசியாவார்; கம்யூனிஸ்டு கட்சி தஸ்தாவேஜுகள் எங்கள் ஆபீசிலிருக்கிறது; அடிப்படைக் கொள்கைகளில் தி. மு கழகத்திற்கும், கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் வித்தியாசமுண்டு; டால்மியாபுரம் பெயரை மாற்றுவதென்பதை ஒரு பெரிய பிரச்னை அல்ல வென்று நாங்கள் கருதுகிறோம்; இதை எங்கள் மாகாணக் கமிட்டி மெம்பர்கள் வெறுத்தனர்; தோழர்கள் ஜீவானந்தமும், கல்யாணசுந்தரமும் எதிர்த்தனர்; 'ஜனசக்தி' வாயிலாகவும் இது எதிர்க்கப்பட்டிருக்கிறது; எங்கள் கட்சியினரை, மற்ற கட்சிகளுடன் சேரக்கூடாதென கூறியுள்ளோம்; நாங்கள் நாகு என்பவரை சம்பவத்தன்று அனுப்பி, 'ஜனசக்தி'க்கு அறிக்கை அனுப்பச் சொன்னோம்; ராமதாஸ் அன்றைய நடவடிக்கையில் சேர்ந்திருந்தால் கட்சியில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்போம்; அம்மாதிரி ஒன்றும் எடுக்கவில்லை; தற்போது அதிக பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது; தி. மு. கழகத்தினர், அரக்கோணம் மாநாட்டுத் தீர்மானப்படி எங்களுடன் சேரமாட்டார்கள்; கம்யூனிஸ்டு கட்சி, ராஜாஜி திட்டத்தை தேர்தலில் ஆதரித்தது; ஏனென்றால், நாங்கள் காங்கிரசைத் தோற்கடிக்கவே ஆதரித்தோம்."

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :—

"ராம்தாஸ் 1951 முதல் லால்குடி கம்யூனிஸ்டு கட்சிக் காரியதரிசி; மெம்பர்கள் சேர்ப்பதும், கிராமங்களுக்குச் செல்வதும் அவரது வேலைதான்; அவருடைய ரிப்போர்ட்டுகளை நேரடியாகவே கொடுப்பார்; 1953 அக்டோபருக்குமுன் அவருக்கு டால்மியாபுரம் சேர்ந்ததல்ல; நான், 1941 முதல் கட்சியிலிருக்கிறேன்; 1951 மார்ச்சில் திருச்சி வந்தேன்; சென்ற தேர்தலின் போது நாங்கள் தி. க., தி. மு. க.-வுடன் சேர்ந்து வேலை செய்யவில்லை; சுயமாகவே சிலரை ஆதரித்தோம்; மாகாணக் கமிட்டி, டால்மியாபுரம்போராட்டத்தை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அது ஒரு கட்டுரையாக 'ஜனசக்தி' யில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனது கட்சி சகாக்களை லால்குடியிலும், டால்மியாபுரத்திலும் விசாரித்ததில், ராம்தாஸ், போராட்டத்தில் சேரவில்லை என்ற முடிவுக்கு வந்தேன்."

பின்னர், தோழர் வி. நாகு சாட்சியம் கூறியதாவது :—

"ஜூலை 15-ந் தேதி, 'ஜனசக்தி' பத்திரிகைக்காக டால்மியாபுரம் போராட்டத்தை ரிப்போர்ட் செய்யச் சென்றேன்; குண்டடிபட்டவர், இரண்டாம் வண்டியில் இருந்தார்; புல்லம்பாடியில் அடிபட்டவர்களுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது; லால்குடி ஸ்டேஷனில், கட்சிக் காரியதரிசி ராம்தாஸ் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தார்; வண்டி வந்து கொண்டிருக்கையில், நான், ராம்தாஸைக் கூப்பிட்டேன்; டால்மியாபுரத்தில் நடந்ததைக் கூறினேன்; அடிபட்டவர்களை இறக்குவதற்கு யாரும் உதவிக்கு வாராததால், நானும், ராம்தாஸும் அதிகாரிகளுக்கு ஒத்தாசையாகச் சென்றோம்; ராம்தாஸ் டால்மியாபுரம் வரவேயில்லை; நான் ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சி கமிட்டி மெம்பர்."

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :—

"போலீசார் தடியடிப் பிரயோகம் நடந்த பின்னரே, ஜனங்கள், கல்லெறிதலில் ஈடுபட்டனர்; பின்னரே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது."

அடுத்துத் தோழர் பாஸ்கரன் கூறியதாவது :

"நான் லால்குடி தாலுகா, வழுதியூர் ஆதிகுடி பஞ்சாயத்துப் போர்டு தலைவர்; எதிரி ராம்தாஸ் போர்டு உபதலைவர்; அவர் அவர் 15—7—53ம் தேதி சுமார் 11-மணிக்கு வந்தார்; 1-30 மணி வரை கண்ட்ராக்டருடன் பேசிக் கொண்டிருந்தோம்; ராம்தாஸுடன், 18-ம் எதிரியும் இருந்தார்; சுமார் 2-30 மணிக்கு 17ம் எதிரியும், கண்டிராக்டர் தங்கவேலுவும் லால்குடிக்குப் போனார்கள்."

அடுத்து, ஆதிகுடி கிராம முன்முன்சீப் சுப்ரமணிய அய்யர் சாட்சியம் கூறியதாவது :

"ராம்தாஸ், கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர் என எனக்குத் தெரியும்; தி. மு. கழகத்துடன் இவருக்குத் தொடர்பு இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது."

பின்னர், கண்டிராக்டர் தங்கவேலு தமது சாட்சியத்தில் கூறியதாவது :

"ஜூலை 15-ம் தேதியன்று பணம் வாங்கச் சென்றேன்; பஞ்சாயத்து தலைவர், 18-ம் எதிரி ராம்தாஸ், மற்றும் சிலர் அங்கு இருந்தனர்; 2-30 மணிக்கு திருச்சிக்குப் போவதாக அவர் கூறினார்; என்னையும் கூப்பிட்டார்; வரவில்லை என்று சொல்லிவிட்டேன்; பின்னர் நான், தலைவர் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றேன்; அப்போது ராமதாஸ் கிளம்பிப் போய்விட்டார்; மறுபடியும் வந்து என்னை ஸ்டேஷனுக்கு வரும்படி அழைத்தார்; நான் சைக்கிளில் சென்றேன்; அவரும் சைக்கிளில் ஒரு சிநேகிதருடன் வந்தார்; லால்குடி ஸ்டேஷனிலுள்ள ஓட்டலில் சாப்பிட்டேன்; பிறகு அவர் திருச்சிக்குச் செல்வதாக சென்றார்; நான் போய்விட்டேன்."

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது :

"நான், மோட்டார் சைக்கிளில் செல்லவில்லை."

தி. மு. கழகக் கிளைகள் துவக்கம்

1—1—54ல், சார்வாய்புதூர் (ஆத்தூர் வட்டம் — சேலம்)ல், தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் கி. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. சி அய்யாக்கண்ணு கொடியேற்றுவித்தார். தோழர் எம். பி. சுப்ரமணியம் பி. ஏ., எம். எல். ஏ., அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்தார். தோழர்கள் ஆ. செ. அன்பழகன், என். சே ராசு சொற்பொழிவாற்றினர். பின்னர் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர் கி. இராமசாமி; துணைச்செயலாளர்: அ. முத்துசாமி; பொருளாளர்: க. சின்னு; மாவட்டப் பிரதிநிதி: குப்புசாமி. செயற்குழு உறுப்பினர்கள்:— பிச்சமுத்து, வெ. ராமசாமி, தெ. சின்னு, அங்கமுத்து, கிருஷ்ணன், பெரியசாமி, ஆறுமுகம், வெங்கடாசலம், சிங்காரம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

2—1—54ல், புங்கவாடி (ஆத்தூர் வட்டம்—சேலம்)யில் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் இரா. மதியழகன் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். கே. இராசு கொடியேற்றுவித்தார்; தோழர் எம். பி. சுப்ரமணியம் பி. ஏ., எம் எல் ஏ, கழகத்தை துவக்கிவைத்தார். தோழர்கள் ஆ. செ. அன்பழகன், கே. சி. அய்யாக்கண்ணு சொற்பொழிவாற்றினர் பின்னர் கழகநிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: இரா. மதியழகன்; துணைச்செயலாளர் : என். பி. கண்ணப்பா; பொருளாளர்: வி. சின்னமுத்து; மாவட்டப் பிரதிநிதி: எஸ். சவரிமுத்து. செயற்குழு உறுப்பினர்கள்:—பி. இளங்கோ, என். அங்கமுத்து, எம். கடேசன், கே. மூர்த்தி, ஏ. தாமஸ், எம் பச்சமுத்து, டி. கிருஷ்ணன், பி. கந்தசாமி, ஏ. தேவசகாயம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இக்பால் நூல் நிலையம்

தரங்கம்பாடி, ஜன. 9—

13—12—53-ல், தோழர் எம். ஏ. காதர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் எம். ஏ. காதர் தலைவராகவும், கே எம். அகம்மது செயலாளராகவும், எம் அலி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

கலை இல்ல நூலகம்

1-1-54ல், தோழர் எம் எச் எம். அபுபக்கர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். கலை இல்ல நிதிக்காக பிப்ரவரி 2வது வாரத்தில் "அணைந்த விளக்கு" என்ற நாடகம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

பன்னீர் செல்வம் சமரச வாலிபர் சங்கம்

குடந்தை, ஜன. 8—

3—1—54ல், தோழர் ச. குருசாமி தலைமையில், நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, இவ்வாண்டுக்கு, தோழர்கள் கே. எஸ். இராஜன் தலைவராகவும், சி. முத்து செயலாளராகவும், பா. சாமிநாதன் பொருளாளராகவும், மற்றும் 8 பேர்களைக் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பொங்கல் தமிழ்த் திருநாள் கொண்டாடுவதென்றும், அதற்கென தோழர்கள் மு. கருணாநிதி, திருவண்ணாமலை ப. உ. சண்முகம் ஆகியோரை வரவழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளன தேர்தல் கூட்டம்

குடியாத்தம், ஜன. 9—

5—1—54-ல், சம்மேளனத்தின் தேர்தல் கூட்டம் தோழர் கே. எம். சாமி தலைமையில், நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எம். தனப்பால் தலைவராகவும், சி. எ. கண்ணன் துணைத் தலைவராகவும், முருகானந்தம் செயலாளராகவும், ஜெ. மாசிலாமணி துணை செயலாளராகவும், சி. சின்னசாமி பொருளாளராகவும், மற்றும் 16 நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருமணங்கள்

★

உறையூர் தோழர் பி. ராஜனுக்கும், தோழியர் புட்பத்திற்கும், 13—12—53 அன்று நடந்தேறிய திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

* * *

சேனியில் தோழர் த. மாடசாமிக்கும், தோழியர் சரோசாவிற்கும் மதுரை தோழர் என். முத்து தலைமையில் திருமணம் நடைபெற்றது. அதுபோது, தோழர் எம். ஆர். கணேசன் சொற்பொழிவாற்றினார். திருமண விழாவின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது— வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

மறைவு

"31—12—53-ல், தோழர் ஏ. எம். ரசாக் அவர்களின் தந்தையார் முகம்மது சரீப் அவர்கள், மாயூரத்தில் இயற்கை யெய்தியதைக் குறித்து, மாயூரம் தி. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது," என்று தோழர் வி. ஏ. பாண்டியன் அறிவிக்கிறார்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

★

சென்னை

இடம் :
வண்ணைத் தியாகராயர்
கல்லூரித் திடலில்
ஆரம்பம் : மாலை 2 மணி

பேசுவோர் :
தோழர் அண்ணாதுரை
,, நெடுஞ்செழியன்
,, மதியழகன்
,, நடராசன்

திராவிடப் பண் நடனம் :
பேபி டி. ஆர். வசந்தா
இசை : தோழியர் ஜி. கஸ்தூரி

சென்னை வீரர்களால்—குத்துச் சண்டை; தோழர் எஸ். ஆர். சாண்டோ குழுவினரின்—வாட் போர்; கழகத் தோழர்களின்—'கல் சுமந்த கசடர்'—நாடகம்.

சிறுவர் சிறுமியரில் பேச்சுப் போட்டி-தேர்வு பெற்றவர்களுக்கு பரிசு—பேச்சுப் போட்டி நீதிபதிகள்: டாக்டர் எஸ். தருமாம்பாள், காஞ்சி-கல்யாணசுந்தரம், நடிகமணி டி. வி. நாராயணசாமி.

★

கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

"சென்னையில் 14—1—54 அன்று நடக்க இருக்கும் திராவிடர் திருநாளன்று புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு, ரயில் நிறுத்தப் போராட்டம், தடைமீறி கூட்டம், ஊர்வலம் ஆகிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறை சென்ற சென்னைத்தோழர்கள் அனைவரையும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுடன் புகைப்படம் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவே, சிறை சென்ற சென்னைத் தோழர்கள், திருநாளன்று மாலை 1 மணிக்கு தியாகராயர் கல்லூரி மண்டபத்திற்கு வர வேண்டுகிறேன்.

"திருநாளன்று நடைபெற இருக்கும் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வதாகத் தெரிவித்திருக்கும் சிறுவர். சிறுமியர் அனைவரும், மேற்படி நாளன்று 2 மணிக்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

"சென்னை கழகத் தோழர்களும், கிளைக் கழக நிர்வாகிகளும், திருநாள், சிறப்புற நடைபெற தங்களது ஒத்துழைப்பைத் தர கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"வழக்கம்போல், கழகத் தொண்டர்கள், தங்கள் பணியினைச் செய்ய முன்னதாக வந்திருந்து திருநாளைச் சிறப்பிக்க வேண்டுகின்றேன்," என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

★

தியாகராய நகர்

13—1—54 மாலை 6 மணிக்கு, சாதுல்லா தெரு மைதானத்தில், உதவி மேயர் டி. வேணுகோபால் ராவ் தலைமையில், தமிழர் திருநாள் கூட்டம் நடைபெறும். தோழர்கள் திருக்குறள் வீ. முனுசாமி, என். சிவராத்தினம், டி. எம். சண்முகம், ஏ. ஈ. ஆதிமூலம், எம். எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

★

மதுரை

மதுரை நகர் தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் பெ. இரத்தினம் அறிவிப்பதாவது:

14—1—54ல், மணியபட்டி காசிச் செட்டியார் காம்பவுண்டில், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் "இன்பக் கனவு" எனும் நாடகம் நடைபெறும்.

அன்று காலை நகர் தி. மு. கழக நிலையத்தில் தோரணம் கட்டி இனிப்புப் பண்டம் கொடுக்கப்படும்.

17-1-54 மாலை 6 மணிக்கு நகர் தி. மு. கழக சார்பில், கீழ மார்க்கெட் "அண்ணா" திடலில், ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், எஸ். முத்து ஆகியோர் பேசுவர்.

★

14—1—54ல், மதுரை நகர் தி. மு. கழக உட்கிளைகள் சார்பாக நடைபெறும் நிகழ்ச்சிகள் :

சிங்காரவேலர் நினைவுப் படிப்பகம்—கோரிப்பாளையம்.

காலை 6 மணிக்கு சர்க்கரைப் பொங்கல் பொதுமக்களுக்குக் கொடுக்கப்படும். காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இசைத்தட்டு வைக்கப்படும் காலை 6 மணிக்கு கொடியேற்றப்படும் 'மெர்குரி' விளக்குகளால் படிப்பகம் அலங்கரிக்கப்படும்.

* * *

அன்பழகன் படிப்பகம் — சந்தைப்பேட்டை.

இவ்வட்டாரத்தில், புதிய கழகக் கொடிகள் ஏற்றுவித்து தோரணங்கள் கட்டி, விழா கொண்டாடப்படும்

* * *

பன்னீர்ச்செல்வம் நினைவுப் படிப்பகம்—மீனாட்சித்தோப்பு

இப்படிப்பகத்தின் சார்பில், வீதிகளில் தோரணங்கள் கட்டி, பொதுமக்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும்.

* * *

வள்ளுவர் நினைவுப் படிப்பகம்—யானைக்கல்.

இப்பகுதியில், தோரணங்கள் கட்டி ஏழைகளுக்குப் பொங்கல் வழங்கப்படும். சொற்பொழிவு நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு நிறை விழாவும் பொங்கல் புது நாளும்

சென்னை, முத்தியாலுப் பேட்டை, தி. மு. கழக மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும், பொங்கற் புது நாள் விழாவும், 13—1—54 புதன் மாலை 5 மணிக்கு, சென்னை, லிங்கிச் செட்டித் தெரு, மல்லீஸ்வரர் கோயில் முன்பு, தோழர் ம. சு. சம்பந்தம் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், காஞ்சி-கல்யாணசுந்தரம், வி. எஸ். கோவிந்தராசன், மூகவை பாண்டியன், காஞ்சி-மணிமொழியார் ஆகியோர் பேசுவர்.

தோழர்கள் நெடுஞ்செழியன், என். வி. நடராசன் இருவருக்கும் வரவேற்பு இதழ் அளிக்கப்படும்.

'உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம்' நினைவுப் படிப்பகம்—அழகரடி.

இப்பகுதியில் தோரணங்கள் கட்டி, புதுக்கொடியேற்றுவிக்கப்படும் அப்பகுதியிலுள்ள 150 தோழர்களும், படிப்பக உறுப்பினர்கள் அனைவரும் ஒரே நிறத்தில் கைத்தறி ஆடைகள் அணிவர். காலையில், சிறுவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பொங்கல், கரும்பு வழங்குவர்.

* * *

மத்திய வட்டாரம் தி. மு கழகம்

இவ்வட்டாரத்தில், திண்டுக்கல் ரோடு, மேலகாட்டுப் பொட்டல், வெள்ளியம்பலத் தெரு ஆகிய வீதிகளில் தோரணங்கள் கட்டி, புதிய கொடி யேற்றுவிக்கப்படும். திண்டுக்கல் ரோடு, வெள்ளியம்பலத் தெருவில் ஒலி பெருக்கி வைத்து, இசைத்தட்டுகள் வைக்கப்படும். சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும்.

* * *

சத்தியவாணிமுத்து அம்மையார் படிப்பகம்—சிங்காரபுரம்.

இப்பகுதியில் தோரணங்கள் கட்டி, புதிய கொடியேற்றி சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும். இரவு 7 மணிக்கு இன்னிசைவிருந்து நடைபெறும்.

* * *

பாண்டியன் நினைவுப் படிப்பகம்—சிம்மக்கல்

இப்பகுதியில் தோரணங்கள் கட்டி புதிய கொடிகள் ஏற்றப்படும். காலை 6 மணி முதல் மாலை 8 மணி வரை ஒலி பெருக்கி மூலம் இசைத்தட்டு வைக்கப்படும்.

* * *

மறுமலர்ச்சிக் கழகம்—வடக்கு மாசி வீதி

இப்பகுதியில் தோரணங்கள் கட்டி, புதிய கொடி ஏற்றி, ஒலிபெருக்கி மூலம் இசைத்தட்டு வைக்கப்படும்.

* * *

இளங்கோ மன்றம்—பாண்டிய வேளாளர் தெரு

இப்பகுதியில், தோரணங்கள் கட்டி, புதிய கொடிகள் ஏற்றுவிக்கப்படும்.

* * *

மஜீத் நினைவுப் படிப்பகம்—முனிச்சாலை ரோடு

பொங்கலின் மூன்றாம் நாள் இரவு இன்னிசை விருந்து நடத்தப்படும்.

★

மேலூர்

(மதுரை மாவட்டம்)
16—1—54 சனி மாலை
பேசுவோர் :
எம். எஸ். தென்னரசு
உ. பில்லப்பன்
இராமு. செங்குட்டுவன்
பூவை. இராமசாமி
மழைத்துளி

★

நாசிங்கபுரம்

பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, பிள்ளையார் கோயில் முன், தோழர் எம். பி. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில், 'காதல் பலி' என்னும் நாடகம், அண்ணா நாடக மன்றத்தினரால் நடத்தப்பெறும்.

★

பெங்களூர்

14—1—54 வியாழன் மாலை 5 மணிக்கு, பெரியார் நகரில் (டானரி ரோட்) எஸ். ஜே. உசேன் தலைமையில், திராவிடர் திருநாள் கூட்டம் நடைபெறும். ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசுவார்.

★

குடந்தை

14—1—54ல், பாணாதுறை மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், பொங்கல் விழா கொண்டாடப்படும். அன்று மாலை 6 மணிக்கு, 'பொங்கல் விழா' பற்றி ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

★

திண்டுக்கல்

14—1—54 வியாழன் மாலை 6 மணிக்கு, சேலை ஹால் திடலில், கே. எஸ் பாண்டியன் படிப்பகத்தின் சார்பில், செல்வத் தமிழன் தலைமையில் பொங்கல் விழா பொதுக் கூட்டம் நடைபெறும். கோவை பசழியன் பேசுவார். மீராபாய், சுலட்சுமி ஆகியவர்களின் நடனமும், முத்தமிழ் நடக மன்றத்தினர் நடிக்கும் 'வழக்கு வாபஸ்' என்னும் நாடகமும் நடைபெறும்.

★

பொம்மேகுப்பம்

14—1—54 வியாழன் மாலை 6 மணிக்கு. திராவிடர் திருநாளை முன்னிட்டு, எம். மாணிக்கம் தலைமையில், சி. பி. சிற்றரசு பேசுவார்.

அன்று இரவு 10 மணிக்கு. சி. எம் எஸ். நாடக குழுவினரால், இரா. செல்வம் அரங்கில் 'நச்சுக் கோப்பை' என்னும் நாடகம் நடைபெறும்.

★

ஊத்துக்குளி

14—1—54 மாலை 6 மணிக்கு, அண்ணா திடலில், பொங்கல் விழா கூட்டம், ஊ கை. சபாபதி தலைமையில் நடைபெறும். அ ச இளங்கோ பேசுவார்.

★

சமய நல்லூர்

14-1-54 காலை 10 மணிக்கு, திருவள்ளுவர் திடலில், காலை மணிக்கு, பொங்கல் விழாவை முன்னிட்டு, நகர் முழுதும் கொடி யேற்றல்; போட்டிப் பந்தயங்கள்; மாலையில், கால் பந்துப் போட்டி; பரிசு வழங்குதல்.

★

கல்லாநத்தம்

14—1 54 வியாழன் மாலை 6 மணிக்கு, பொங்கல் விழாவை முன்னிட்டு எஸ். பி ராமசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும் எம். பி. சுப்பிரமணியம், சிற்றூளி சுப்பிரமணியம், கே. சி. அய்யாக்கண்ணு, ஆ. சே. அன்பழகன் ஆகியோர் பேசுவர்.

★

திருப்பூர்

15—1—54 மாலை 6 மணிக்கு, நொய்யல் நதியில், திரு. வி. க படிப்பகத்தின் சார்பில், எஸ். ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

★

அய்யம்பாளையம்

14—1—54 வியாழன் மாலை 5 மணிக்கு
இடம் : காந்தி மைதானம்
பேசுவோர் :
தோழர் மீ சு. இளமுருகு
தோழியர் பொற்செல்வி

அன்று மாலை 3-30 மணிக்கு காந்தி மைதானத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும் இரவு 8-30 மணிக்கு, சின்ன அய்யம்பாளையம் அண்ணா திடலில், தோழியர் பி என் செல்வா தோழர் சௌந்திரராசன் குழுவினருடன் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

★

கரூர்

14—1—54 மாலை 6 மணிக்கு
தலைவர் :
தோழர் கே. ஏ முருகேசனார்
பேசுபவர் :
தோழர் ஈ. வி. கே. சம்பத்

★

வடக்கன்குளம்

தமிழறிவு இயக்கம்
14—1—54 வியாழன் மாலை
தலைவர்: வீரபாகு
பேசுவோர் :
அலி சேக் மன்சூர்
திராவிடமணி
சின்னத்துரை

வரவேற்பாளர் :
ரெத்தினசாமி

★

நீடாமங்கலம்

15—1—54 வெள்ளி மாலை 6 மணிக்கு, சீனிவாச பிள்ளை சத்திரத்திற்கு எதிரில், பி. டி. அரசு தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ, எஸ். எம். வைத்தியலிங்கம் ஆகியோர் பேசுவர்.

பம்பாய்

14—1—54 வியாழன் மாலை 6-30 மணிக்கு, தாராவி, வாழைக்கட்டவாடியில், திராவிடர் திருநாள் கூட்டம், ஏ. எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். வரவேற்பாளர்: நெல்லை இரா. இளம்வழுதி. பலர் பேசுவர்.

★

மான்கூர்டு (பம்பாய்)

திராவிடர் திருநாளை முன்னிட்டு, மான்கூர்டு தி. மு. கழகத் தோழர்கள் கைத்தறிபுத்தாடை அணிந்து விழா கொண்டாடுவர்.

கழக அலுவலகத்தில், தோழர் கே. எம். கே. சாமி தலைமையில், தோழர் பி. பெரியசாமி கொடியேற்றி வைப்பார். தோழர்கள் ஏ. கே. சாமிக்கண்ணு, ஆர். முனுசாமி, ஏ. எம். யூசுப் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். பொதுமக்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.